## வகுப்பு - 8 - புவியியல், 7 - கண்டங்களை ஆராய்தல்

## ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா

141. தவறானதை நீக்குக.

ஆப்பிரிக்காவின் நீர்வழிப்போக்குவரத்துகளில் இந்திய பெருங்கடலில் உள்ள முக்கிய துறைமுகங்கள்

(1) டர்பன் (2) தர்-இ-சலாம் (3) மொஹாபு (4) போர்ட்சைடு

142. ஆப்பிரிக்காவின் நீர்வழிப் போக்குவரத்துகளில் மத்தியதரைக்கடலில் உள்ள முக்கிய துறைமுகங்கள்

(1) போர்ட்சைடு மற்றும் அலெக்சாந்திரியா (2) டர்பன் மற்றும் தர்-இ-சலாம்

(3) கேப்டவுடன் மற்றும் அல்ஜியஸ் (4) மொஹாபு மற்றும் அபிட்ஜன்

143. தவறானதை நீக்குக.

ஆப்பிரிக்காவின் நீர்வழிப் போக்குவரத்துகளில் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள முக்கிய துறைமுகங்கள்

(1) கேப்டவுன் (2) அல்ஜியஸ் (3) அபிட்ஜன் (4) டர்பன்

144. ஆப்பிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள் உள்ள இடங்களையும் மற்றும் தலைநகரங்களையும் நாடுகளின் பெயர்களையும் பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. கெய்ரோ | - | 1. தென் ஆப்பிரிக்கா |
| ii. நைரோபி | - | 2. மொரோக்கா |
| iii. அடிஸ்அபாபா | - | 3. எத்தியோப்பியா |
| iv. காஸாபிளாங்கா | - | 4. கென்யா |
| v. ஜோகன்ஸ்பர்க் மற்றும் டர்பன் | - | 5. எகிப்து |

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 4 | 5 | 1 | 2 | 3 |
| (4) | 3 | 4 | 5 | 1 | 2 |

145. ஆப்பிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள பின்வரும் பன்னாட்டு விமான நிலையங்களுள் நாட்டின் தலைநகரில் அமையாத விமான நிலையம் ______.

LIVEWORKSHEETS

(1) கெய்ரோ (எகிப்து) (2) நைரோபி (கென்யா)

(3) அடிஸ்அபாபா (எத்தியோப்பியா) (4) காஸாபிளாங்கா (மொராக்கோ)

146. ஆப்பிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள பன்னாட்டு விமான நிலையங்களுள் ஒன்றான ஜோகன்ஸ்பர்க் எந்த நாட்டின் முக்கிய நகரங்களாகும்?

(1) எகிப்து (2) கென்யா (3) எத்தியோப்பியா (4) தென் ஆப்பிரிக்கா

147. உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட கண்டம் ______.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஆஸ்திரேலியா (4) வட அமெரிக்கா

148. உலகின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட கண்டம் ______.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஐரோப்பா (4) வடஅமெரிக்கா

149. 2019 ஆம் ஆண்டின் ஐக்கிய நாட்டு சபையின் மதிப்பீட்டின்படி ஆப்பிரிக்க கண்டத்தின் மக்கள் தொகை ______.

(1) 431 கோடி (2) 331 கோடி (3) 231 கோடி (4) 131 கோடி

150. ஆப்பிரிக்க கண்டத்தின் சமச்சீரற்ற மக்கள்தொகை பரவலுக்கான காரணம்

(1) இயற்கை நிலத்தோற்ற தடைகள்

(2) ஆப்பிரிக்காவின் சராசரி மக்கள் அடர்த்தி = 45 நபர்கள் / 1 சதுர கிலோ மீட்டர்

(3) கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 41% மக்கள் நகர்புறங்களிலும் 59% மக்கள் கிராமப்புறங்களிலும் வசிக்கின்றனர்

(4) நைல் டெல்டா மற்றும் தென் ஆப்பிரிக்க பகுதிகள் ஆப்ரிக்காவின் மக்களடர்த்தி மிகுந்த பகுதிகள்

151. ஆப்பிரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு ______.

(1) எத்தியோப்பியா (2) நைஜீரியா (3) தென் ஆப்பிரிக்கா (4) அல்ஜீரியா

152. ஆப்பிரிக்காவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு ______.

(1) நைஜீரியா (2) தென் ஆப்பிரிக்கா (3) லிபியா (4) எத்தியோப்பியா

LIVEWORKSHEETS

153. ஆப்பிரிக்காவின் சராசரி மக்களடர்த்தி 1 சதுர கிலோ மீட்டருக்கு எத்தனை நபர்கள் வீதம்?

(1) 65 (2) 55 (3) 45 (4) 35

154. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் (100%) _______ மக்கள் நகர்புறங்களில் வசிக்கின்றனர்.

(1) 41% (2) 59% (3) 51% (4) 49%

155. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் (100%) _______ மக்கள் கிராமபுறங்களில் வசிக்கின்றனர்.

(1) 41% (2) 59% (3) 51% (4) 49%

156. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் (100%) நகர்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் முறையே _______ மக்கள் வசிக்கின்றனர்.

(1) 41% மற்றும் 59% (2) 51% மற்றும் 49%

(3) 31% மற்றும் 69% (4) 61% மற்றும் 39%

157. ஆப்பிரிக்க கண்டத்தின் மக்களடர்த்தி மிகுந்த பகுதிகள் _______.

(1) சகாரா மற்றும் சாஹேல் பகுதிகள்

(2) சவானா மற்றும் பெரிய பிளவு பள்ளத்தாக்கு ஏரி பகுதிகள்

(3) கிழக்கு ஆப்பிரிக்க உயர் நிலங்கள் மற்றும் சுவாலி கடற்கரை பகுதிகள்

(4) நைல் வடிநிலப் பகுதி(டெல்டா) மற்றும் தென் ஆப்பிரிக்கா பகுதிகள்

158. தவறானதை நீக்குக.

நிலம், மொழி மற்றும் பண்பாட்டு சார் தனித்துவ அடையாளத்தை கொண்டு விளங்கும் உலகில் காணப்படும் தொல்குடிஇன மக்களுள், பின்வரும் ஆப்பிரிக்காவின் தொல்குடி இனங்கள் முக்கியமானவை.

(1) அபர் (2) பாட்வா (3) புஷ்மன் (4) அபாரிஜின்கள்

LIVEWORKSHEETS

159. பின்வருவனவற்றுள் எது ஆப்பிரிக்க கண்டத்தின் தொல்குடி இனங்களுடன் தொடர்பற்றது

(1) டிங்கா (2) மசாய் (3) பிக்மீஸ் (4) எஸ்கிமோஸ்

160. ஜீலு, அபர், பாட்வா, புஷ்மன், டிங்கா, மசா, பிக்மீஸ் ஆகிய உலகின் முக்கிய தொல்குடி இனங்கள் (பூர்வக்குடி இனங்கள்) எந்த கண்டத்தை சார்ந்தவை?

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஐரோப்பா (4) அஸ்திரேலியா

161. உலகின் பிற பகுதிகளிலிருந்து தொலைதூரத்தில் தனித்து அமைந்துள்ளதால் இறுதியாக கண்டறியப்பட்ட கண்டம் _______.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) அண்டார்டிகா (4) ஆஸ்திரேலியா

162. ஆஸ்திரேலியா கண்டம் இறுதியாக கண்டறியப்பட்டதற்கான காரணம்

(1) உலகின் பிற பகுதிகளிலிருந்து தொலைதூரத்தில் தனித்து அமைந்துள்ளது.

(2) உலகின் மிகப்பெரிய தீவாக உள்ளது.

(3) உலகின் மிகச் சிறிய கண்டமாக உள்ளது.

(4) கண்டப்பகுதி முழுவதும் ஒரே நாடாக கருதப்படும் ஒரே கண்டமாக உள்ளது.

163. உலகின் மிகப்பெரிய தீவாக உள்ள கண்டம் _______.

(1) வடஅமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஐரோப்பா (4) ஆஸ்திரேலியா

164. உலகின் மிகச் சிறிய கண்டம்

(1) அண்டார்டிகா (2) ஆஸ்திரேலியா (3) ஆசியா (4) ஐரோப்பா

165. கண்டப்பகுதி முழுவதும் ஒரே நாடாக கருதப்படும் அரசியல் எல்லை கொண்ட ஒரே கண்டம் _______.

(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஆசியா (4) ஆஸ்திரேலியா

166. 1770 ல் கேப்டன் ஜேம்ஸ்குக் என்ற மாலுமியால் கண்டறியப்பட்ட கண்டம்

(1) வடஅமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஆஸ்திரேலியா (4) ஆசியா

LIVEWORKSHEETS

167. ஆஸ்திரேலியா உலக நிலவரைபடத்தில் அமைந்துள்ள அமைவிடம் ______.

(1) $10^0$ 4′ தெ - $39^0$ 08′ தெ அட்சம் மற்றும் $113^0$ 9′ கி - $153^0$ 39′ கி தீர்க்கம்

(2) $7^0$ வ - $84^0$ வ அட்சம் மற்றும் $53^0$ மே - $180^0$ தீர்க்கம்

(3) $37^0$ 21′ வ - $34^0$ 51′ தெ அட்சம் மற்றும் $17^0$ 33′ மே - $51^0$ 27′ மே தீர்க்கம்

(4) தென் துருவப்பகுதி

168. ஆஸ்திரேலியா கண்டத்தை ஏறத்தாழ இரண்டு சம பகுதிகளாக பிரிப்பது

(1) கடகரேகை (2) மகரரேகை

(3) நிலநடுக்கோடு (4) கிரீன்விச்கோடு

169. ஆஸ்திரேலியா கண்டம் / நாட்டின் பரப்பளவு ______ சதுரகிலோ மீட்டர்.

(1) 30.36 (2) 14 (3) 24.7 (4) 7.68

170. ஆஸ்திரேலியா ______ மாநிலங்களை கொண்டு உள்ளது.

(1) 8 (2) 7 (3) 6 (4) 5

171. ஆஸ்திரேலியா ______ ஒன்றிய பகுதிகளை (யூனியன் பிரதேசங்களை) கொண்டு உள்ளது.

(1) 5 (2) 4 (3) 3 (4) 2

172. ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தின் தலைநகர் ஒன்றிய பகுதி (யூனியன் பிரதேசம்)

(1) குயின்ஸ்லாந்து (2) விக்டோரியா

(3) நியூசவுத்வேல்ஸ் (4) கான்பெரா

173. பிழையை நீக்குக ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தின் மாநிலங்கள் ______.

(1) குயின்ஸ்லாந்து (2) விக்டோரியா

(3) நியூசவுத்வேல்ஸ் (4) வடக்கு ஒன்றிய பகுதி (யூனியன் பிரதேசம்)

LIVEWORKSHEETS

174. ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியான _______ சட்டங்களைக் கொண்டுள்ளன.

(1) குடியுரிமை (2) கல்வி உரிமை

(3) சொத்துரிமை (4) அரசியல் அமைப்பு

175. ஆஸ்திரேலிய கண்டம் _______ தீவுகளை கொண்டுள்ளது.

(1) 9222 (2) 8222 (3) 7222 (4) 6222

LIVEWORKSHEETS